மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு வெளியிட்டுள்ள அறிவிப்புகள், தியாகச் சீலர்களுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் அறிவிப்புகள். பாசத் தாயின் வழியிலேவந்த அரசின் பாராட்டு அறிவிப்புகள். விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகத்தைப் போற்றும் அறிவிப்புகள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) *விரைவிலே அதற்கு மகிழ்ச்சியைத் தெரிவிப்பேன்.*

5. 12-2-2019 அன்று விவசாயக் கடன் தள்ளுபடி குறித்து கூட்டுறவுத் துறை அமைச்சர் தெரிவித்த கருத்திற்கு விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் என்ன?* (குறுக்கீடு) *இதுசம்பந்தமாகவா, வேறு ஏதாவதா?* (குறுக்கீடு) *சரி, சொல்லுங்கள்.*

பிற்பகல் 12-25

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் இதே அவையில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சில விளக்கங்களைச் சொல்கிறபோது, விவசாயிகளுடைய கடன் தள்ளுபடியைப்பற்றி விவாதம் நடைபெற்ற நேரத்தில், 'திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நீங்கள் கடன் தள்ளுபடி செய்வதாகச் சொல்லி வழங்கியிருந்தாலும், அதற்குரிய சான்றிதழ்களெல்லாம் நீங்கள் வழங்கவில்லை' என்று இங்கே அழுத்தந்திருத்தமாகச் சொன்னது மட்டுமல்ல, 'அதை நீங்கள் நிரூபிக்க வேண்டும்' என்ற நிலையிலே, அவர் கருத்தை இங்கே பதிவு செய்திருக்கிறார். அவருடைய உரை என்னுடைய கையிலே இருக்கிறது. இப்போது என்னுடைய கையிலே, எங்களுடைய ஆட்சியில் யார், யாருக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பிலே கடன் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதற்கான ஆதாரங்களும்; சான்றிதழ்கள் வழங்கப்பட்டதற்கான ஆதாரமும் இருக்கிறது. இதை நான் தங்களுடைய பார்வைக்குக் கொடுக்க விரும்புகிறேன்.*

உதாரணமாக, சிலவற்றைத்தான் நான் கொண்டு வந்திருக்கிறேன்; எல்லாவற்றையும் கொண்டுவரவில்லை. அதில், 'பி. சண்முகம், திருவண்ணாமலை மாவட்டம், தச்சம்பாடி

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம்மூலம் ரூ.36,975/-, எம். ஏழுமலை ரூ.3,585/-, டி. பெரியசாமி, ரூ.24,078/-, ஆர். பொன்னப்ப பிள்ளை ரூ.39,454/-. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதெல்லாம். . .* (குறுக்கீடு)

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'நிரூபிக்க வேண்டும்' என்று சொன்னார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அவையில் பேசுவதற்கு முன்பே என்னிடம் இந்தத் தகவலை சொல்லியிருந்தால், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொல்லி, அதற்கு சரியான விளக்கத்தை தருமாறு சொல்லியிருப்பேன்.* (குறுக்கீடு) *இல்லை, திடீரென்று நீங்கள் பெயர்களைப் படிப்பதாலே. . .* (குறுக்கீடு) *இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பதில் சொல்ல அழைக்கிறேன். அது வேறு.* (குறுக்கீடு) *ஆனால், இதை நீங்கள் முன்பே என்னிடத்தில் கொடுத்திருப்பீர்களேயானால், நான் அதை உரிய அமைச்சரிடம் அனுப்பி, அதற்குரிய பதிலை அவரை தெளிவாகச் சொல்லச் சொல்லியிருப்பேன். இப்போது, நீங்கள் திடீரென்று அதை பேசுகின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு மேலோட்டமாகத்தான் பதில் சொல்ல முடியும்.* (குறுக்கீடு) *நீங்கள் சொல்கிற ஆதாரங்களை மறுக்கவோ அல்லது விளக்கவோ அவருக்கு வாய்ப்பில்லாத காரணத்தினால், அதை நீங்கள் சொல்லாமல், மேலோட்டமாக உங்களுடைய கருத்தைத் தெரிவிக்கலாம்.* (குறுக்கீடு) *நீங்கள் மேலோட்டமாகச் சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வதை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். உங்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான் நான் பேசியிருக்க வேண்டும். சட்டமன்ற விதிகளின்படி, நீங்கள் சொல்வதுதான் உண்மை. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் இங்கே பேசுகின்றபோது, 'அதை நீங்கள் நிரூபிக்கிறீர்களா?' என்று ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார். அதனால்தான் இதை நான் சொன்னேனேயொழிய, வேறொன்றும் இல்லை. இதில் எந்த உள்நோக்கமும் இல்லை. இப்போது அதற்கான ஆதாரத்தைத் தங்களிடம் ஒப்படைத்துவிடுகிறேன். அதற்குப் பிறகு நீங்கள் என்ன முடிவெடுக்கிறீர்களோ அதற்கு நான் கட்டுப்படத் தயாராக இருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை நீங்கள் என்னுடைய கையில் கொடுங்கள். அதுகுறித்து நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுச் சொல்கிறேன். இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது பதில் கூறுவதாக இருந்தால் கூறலாம். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல், 'நீங்கள் கொடுக்கவில்லை, அவர்கள் வாங்கவில்லை' என்று நான் சொல்லவில்லை. அதாவது, நீங்கள் ஒரு குடும்பத்துக்கே கொடுத்தீர்கள் என்று நாங்கள் சொல்கிறோம். (குறுக்கீடு) அதாவது, தோவாளை என்ற கிராமத்தில் ஒரு குடும்பத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே, அப்பா, மகன், மனைவி ஆகிய மூன்று பேருக்கு ரூ.89 இலட்சம் கொடுத்திருக்கிறீர்கள். இதெல்லாம் கொடுத்தவர்களுடைய வரவுதான். நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். 'கொடுக்கவில்லையென்று' நான் சொல்லவில்லை. அதாவது அவர்களுக்கு முழுமையாகக் கொடுக்கப்படவில்லை. எங்களைப்போன்று அவர்கள் சான்றிதழ் கொடுக்கவில்லை. 'சான்றிதழ் கொடுக்கப்படும்' என்று சொல்லி, சான்றிதழ் முழுமையாகக் கொடுக்கப்படவில்லை. இதிலேயும்கூட உங்களுடைய காலத்தில்—நான் என்ன சொன்னேன்? 'கொடுக்கவில்லை' என்று நான் சொல்லவில்லை. (குறுக்கீடு) இல்லை, எல்லாம் முழுமையாகக் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பின்னர், நீங்கள் பேசுங்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதற்கு நான் சொல்வது, அன்றைக்கு கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்த துணை சபாநாயகர் அவர்கள் யார், யாருக்கு எவ்வளவு கொடுத்திருந்தார்கள் என்று ஒரு புத்தகமே போட்டு இந்தச் சபையில் கொண்டுவந்து கொடுத்தார். அதேபோல யார், யாருக்கு எவ்வளவு தள்ளுபடி செய்யப்பட்டது*

என்பதெல்லாம் என்னிடத்திலும் இருக்கிறது. 12 இலட்சத்து 2 ஆயிரத்து 75 பேருக்கும் தனித் தனியாகக் குறிப்பிட்டு, ஒவ்வொரு சங்கத்திலும் இத்தனைபேருக்குச் சான்றிதழ் கொடுக்கப்பட்டது என்பதாக விவரங்கள் இல்லை. இதில் என்னவென்றால், நிறைய சங்கங்களில் முன்பு வழங்கப்படாமல் விடுபட்டிருந்ததைக்கூட, 2016-ல் நிலுவையாக இருந்ததைக்கூட, இன்றைக்குக் கொடுத்திருக்கிறோம் என்பதைத்தான் நான் சொன்னேன். அதுவும் அந்தச் சங்கத்தினுடைய வளர்ச்சியைக் கருதி, 'கடன்களுக்கு மேல் வட்டி, வட்டியாக வந்து கொண்டிருக்கிறது. அவர்கள் கட்டவும் மறுக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்டவர்களுக்கும் கடன் தள்ளுபடி செய்யுங்கள்' என்று அம்மா அவர்களிடத்தில் எழுதிக் கொடுத்ததால், அம்மா அவர்களும் தள்ளுபடி செய்தார்கள். அதைத்தான் நான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், சொல்லுங்கள்.*

பிற்பகல் 12-30

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பேசிய பேச்சு இந்த அவையிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த உரையை இரண்டே வரிகளில் படிக்கிறேன். "உங்களுடைய ஆட்சியில் அப்படியெல்லாம் சான்றிதழ் கொடுக்கப்படவில்லை; நான் சொல்கிறேன், (குறுக்கீடு) கொடுக்கப்படவில்லை. என்னிடத்தில் இருப்பதைத்தான் சொல்கிறேன். ஆகவே, இதை நிரூபிக்க முடியுமா?" என்ற தொனியிலே அவர் கேட்டிருக்கிறார். எனவே, நிரூபிப்பதற்காகத்தான். யார், யாருக்குச் சான்றிதழ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் அனைத்தையும் எடுத்து வருவதற்குக்கூட நான் தயார். ஒரு* sample-*க்காக 10 நபர்களுக்கான விவரத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். நீங்கள் விசாரித்து, அதற்குப் பிறகு விளக்கம் சொன்னால், அதை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை நான் உங்களிடம் தருகிறேன். நீங்கள் அதைப் பார்த்துவிட்டு, பதிலிருந்தால், சொல்லலாம். அவை முடிவதற்குள்கூட சொல்லலாம்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *ஒரே ஒரு செகண்ட்தான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நான் சொன்னதை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் கொடுத்ததுபோல, 'உங்களுடைய கடன் இவ்வளவு தொகை தள்ளுபடி செய்யப்பட்டது' என்ற சான்றிதழ் ஒவ்வொரு விவசாயிக்கும் வழங்கவில்லை என்பதைத்தான் நான் சொன்னேனேயொழிய, 10 பேருக்கு நீங்கள் சான்றிதழ் கொடுத்திருப்பீர்கள். ஏதோ பணம் கட்டியதற்கான ரசீதைக் கொடுத்திருப்பீர்கள். ரசீது கொடுப்பது வேறு. (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடு) முழுமையாக நான் கொண்டு வந்து படிக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்வதைப்போல, அடுத்த கூட்டத்தொடருக்கு நீங்கள் வரும்போது முழுமையாக இதைப் பற்றிய விவரங்களைச் சொல்கிறேன். எங்களை மாதிரி நீங்கள் சான்றிதழ் கொடுக்கவில்லை என்பதை இப்போதும் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, அதோடு விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) இல்லை, இந்த விவரங்களை உங்களிடம் கொடுத்துவிடுகிறேன். இதற்கு ஏதாவது விளக்கமிருந்தால் அடுத்து வருகிற வாய்ப்பில் நீங்கள் சொல்லலாம்.*

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத்தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*